திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் பற்றி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : அடிக்கடி காவல் துறைக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையில் நடக்கிற மோதல்களைத் தடுக்க வழிவகை கோருதல் போன்ற சப்ஜெக்ட்களை 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சாக ' இந்த லா கமிஷனுக்கு ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆணையத்திற்கு 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'-ல் தேங்கிக் கிடக்கிற வழக்குகளுக்கு எப்படித் தீவிரமாகத் தீர்வு காண்பது என்பதும் ஒரு அம்சமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்.119, திரு. வி.பி. இராசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

119—

எடையாளர்களின் சம்பளத்தை உயர்த்துதல்

* *453*— **திரு. வி.பி. இராசன் :**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் எடையாளர்களின் சம்பளத்தை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. இராசன்.

திரு. வி.பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பணிபுரிகிற எடையாளர்களுக்குச் சம்பளம் உயர்த்தும் குறிப்பு அரசிடம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளில் பணிபுரிகிற

1996 ஆகஸ்ட் 7]

அவர்களுக்கு சம்பளப் பற்றாக்குறையால் தான் பல்வேறு தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை கடந்த கால ஆட்சியாளர்கள் நிரூபித்து இருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளில் பணிபுரிகிற அவர்கள், பொது மக்களுக்கு தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரிகிற அவர்கள், வழங்குகிற அரிசி, ஜீனி, மண்ணெண்ணெய் போன்றவற்றில் எல்லாம் அளவைக் குறைத்து தவறுகள் செய்வதற்கான நிலைக்கு இந்த சம்பளக் குறைவு ஒருவேளை காரணமாக இருக்குமோ என்று ஐயப்பட்டுதான் கேட்கிறேன். அவர்களுக்கு போதிய சம்பளம் தந்தால் இதுபோன்ற குறைகள் தவிர்க்கப்படும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒருமுறை இதனைப் பரிசீலனை செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடையாளர்களுக்கு சம்பள உயர்வு உண்டா என்று கேட்டார்கள். ஒவ்வொரு நியாய விலைக்கடையிலும் விற்பனையாளர்கள் உண்டு ; சேல்ஸ்மேன் உண்டு. கூடுதலாகக் குடும்பக் கார்டுகள் இருந்தால், ஏறக்குறைய 500 கார்டுகளுக்கு மேல் இருந்தால், அந்தந்தச் சங்கங்களினுடைய நிதி ஆதாரத்தையொட்டி, விற்பனையாளர்களுக்குத் துணையாக இந்த எடையாளர்கள், 'பேக்கர்' என்ற அடிப்படையிலே போடப்படுகிறார்கள். விற்பனையாளர்களுக்கு, சேல்ஸ்மேன் என்று சொல்லப்படுகிற நியாய விலைக் கடையிலே பணியாற்றுகிறவர்களுக்கு, அவர்களுடைய நீண்டகாலக் கோரிக்கையின் பேரில் - சம்பளம் கூடுதலாக வேண்டும் என்று செய்த பல போராட்டங்களுக்குப் பின்னால் - 1-3-1996-லே அரசு ஆணையின்படி ஒரு உத்தரவு போடப்பட்டு, 5 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி இருந்தால், சேல்ஸ்மேன், விற்பனையாளர்களுக்கு டைம் ஸ்கேல் போடப்பட்டு, அதன் மூலம் ஏறக்குறைய அவர்களுடைய சம்பள விகிதம் 430-10-450-15-525 என்றும் அதற்கு மேலாக அரசு நிர்ணயித்திருக்கிற அகவிலைப்படியும் சேர்த்து அவர்களுக்கு வழங்கப்படும். 5 ஆண்டுகளுக்கு உட்பட்டவர்களுக்குத் தொகுப்பு ஊதியம், 'கன்சாலிடேட்டட் பே' என்ற அளவிலே 800 ரூபாய் வழங்கப்படுகிறது. இது நியாய விலைக் கடைகளிலே பணியாற்றுகிற சேல்ஸ்மேன்களுடைய சம்பளம். அவர்களுக்குக் கூடுதலாக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் தினக் கூலிகள் என்ற அடிப்படையில் ஏறக்குறைய 3 ஆயிரம் பேர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு

மாதத்திலே 10 நாட்கள் அல்லது 15 நாட்கள் என்ற அளவிலே 10 ரூபாயிலிருந்து 20 ரூபாய் அளவிற்கு அந்தந்தச் சங்கங்களே கொடுத்துக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நியாய விலைக் கடைகளிலே ஏற்படுகிற பல்வேறு குறைகளுக்குக் காரணமே, ரேசன் கடைகளிலே பணியாற்றுகின்ற விற்பனையாளர்களுக்கு சம்பளம் மிகக் குறைவாக இருப்பதுதான் காரணம் என்று சொன்னார்கள். அதுவும் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்ற அடிப்படையில், அது சம்பந்தமாகப் பல்வேறு தொழிற்சங்கங்கள் சார்பாக அரசுக்கு வந்திருக்கிற முறையீடுகளை முறையாகப் பரிசீலனை செய்து, விரைவிலே ஒட்டுமொத்தமாக, யூனிபார்மாக, அவர்களுக்குச் சம்பள விகிதத்தை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு இந்தத் துறை பேசி, விரைவிலே அதற்கான முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எல். மூக்கையா.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நியாய விலைக்கடைகளிலே விற்பனையாளர்கள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ? அப்படி விற்பனையாளர்கள் இல்லாத நியாயவிலைக் கடைகளுக்கு எப்போது அரசு விற்பனையாளர்களை நியமிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, விற்பனையாளர்கள் இல்லாமல் நியாயவிலைக் கடைகள் இருப்பதற்கான வாய்ப்பே இல்லை. சில இடங்களிலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னபடி, ‘டெம்பரவரி பேசிஸ்’ என்ற அடிப்படையில், இர்ரெகுலராகப் பல்வேறு சங்கங்களிலே வேலையிலே அமர்த்தப்பட்டு சில நியாயவிலைக் கடைகளிலே சரியான போதுமான அளவிற்கு சேல்ஸ்மேன் இல்லாமல் இருந்திருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி, முறையாக நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோள், பொதுமக்களிடமிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் வந்திருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் நிர்ணயிக்கப்பட்டால், வேலைவாய்ப்புத் துறை மூலமாக இண்டர்வியூ செய்து, அவர்களை எடுத்துக்கொள்ளலாமா என்று குறிப்பு அரசின் ஆலோசனையில் இருக்கிறது. ஆகவே, விற்பனையாளர்கள் இல்லாத நியாயவிலைக் கடைகளே இருக்கக்கூடாது என்பதிலே இந்த அரசு கவனமாக இருக்கிறது. அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

1996 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. மணிமாறன்.

திரு. இரா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகளிலே பணியாற்றுகிறவர்களுக்கு இருக்கக்கூடிய சம்பளத்திற்கும் - சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசனும் நியாயவிலைக் கடைகளை நடத்துகிறது, அங்கே பணியாற்றுகிற ஊழியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்திற்கும் வித்தியாசம் நிறைய இருக்கிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் நியாயவிலைக் கடைகளிலே பணியாற்றுகிறவர்களுக்கு ஏறத்தாழ 1,800 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகிறது. ஆனால் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலே பணியாற்றுகிறவர்களுக்கு அதிலே பாதிச் சம்பளம்தான் வழங்கப்படுகிறது. ஒரேவிதமான பணியாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு இரண்டுவிதமான சம்பளம் இருப்பது முறைப்படுத்தப்படுமா, சிவில் சப்ளை கார்ப்பரேசன் ஊழியர்களுக்கு வழங்குவது போன்று சமப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நியாய விலைக் கடைகள் தமிழ்நாட்டில் 23,000 இருக்கின்றன. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நடத்தப்படுகிற நியாய விலைக் கடைகள் 1,078 தான். ஆகவே அவர்களுடைய 'டைம் ஸ்கேல்' சம்பளம் என்பது, அவர் சொன்னபடி, ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் பணியாற்றுகின்ற விற்பனையாளர்களுக்கு ரூ.2,000-க்கும் மேற்பட்ட சம்பளம். அதே பணியைச் செய்கின்ற, கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற விற்பனையாளர்களுக்கு வெறும் ரூ.1,100 தான் கிடைக்கிறது. இந்த வேறுபாட்டைப் போக்கவேண்டுமென்று அவர்கள் அதிகமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். 22,000 நியாய விலைக் கடைகளிலும் இதே அளவிற்குச் சம்பளத்தை நிர்ணயம் செய்தால், அந்த நியாய விலைக் கடைகள் நியாயமாக நடக்கமுடியுமா என்பதற்கு நிதியாதாரம் இல்லை. என்றாலும் அவருடைய கோரிக்கை ஓரளவிற்குப் பரிசீலிக்கப்பட்டு, எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவிகரமாக கூட்டுறவுத் துறை இருக்கமுடியுமோ அந்த அளவிற்கு விரைவிலே அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் வேலைபார்க்கின்ற எடையாளர்கள், விற்பனையாளர்கள் போன்றவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருந்தாலும், அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள். எவ்வளவு தேவையோ அவ்வளவு எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு கலெக்டர் சம்பளத்திற்கு நிகரான வருமானம் இருப்பதால் பெண்ணும் கொடுக்கிறார்கள். சீதனமும் அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆகவே எடையாளராக, விற்பனையாளராக, அதாவது சேல்ஸ்மேனாக இருந்துகொண்டு பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய அந்தப் பொருள்களைக் கடத்தி அதிகமாகச் சம்பாதிக்கிற அளவிலே இல்லாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற விற்பனையாளர்கள் அல்லது எடையாளர்கள் செய்கின்ற தவறுகளுக்கு- இப்போது கடுமையான அளவில் கண்டுபிடிக்கப்பட்டு — கடுமையான தண்டனை அளிக்கப்படுகிறது. அவர் சொன்னபடி எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகின்ற அந்த எடையாளர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்பது ஒருபுறம் இருந்தாலும், அந்தத் தவற்றுக்கான விளைவைப் பல்வேறு கால கட்டங்களில் அனுபவித்திருக்கிறார்கள். அதற்குத்தான் ஒட்டுமொத்தமாகக் கூட்டுறவுத் துறையிலே தேர்தல் வந்து கூட்டுறவாளர்கள் அங்கம் வகித்துவிட்டால் இந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டுவிடும். தனி அதிகாரியின் கீழ் கூட்டுறவு இயக்கங்கள் கூட்டுறவுத் துறையில் இயங்குகின்ற காரணத்தினால்தான் மிகப் பெரிய குறைபாடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் இப்போதெல்லாம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. அபரிமிதமான தவறுகள் நடைபெறுவதற்கு இப்போது இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் எடையாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியத்தைக் காட்டிலும் குறைவாக ஊதியம் வழங்கப்படுகிறது. இதைப் பரிசீலனை செய்து உயர்த்துவதற்கு முன்பாக உடனடியாக அந்தக் குறைந்தபட்ச ஊதிய அளவிற்காவது

1996 ஆகஸ்ட் 7]

ஊதியம் உயர்த்தப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கத் தக்க ஒன்று. 'மினிமம் டெய்லி வேஜஸ்' என்று அரசினுடைய ஆணை ஒன்று இருக்கிறது. அதற்குக் குறைந்து சம்பளம் வாங்குகிற விற்பனையாளர்களுடைய சம்பளம் உண்மையிலேயே பரிசீலிக்கப்பட்டு அந்த அளவிற்காவது கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, இது கேள்வி இல்லை, பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்னை மிரட்டக் கூடாது. அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்கிறார். கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. அவர் சீனியர் உறுப்பினர். ஆகவே என்ன சொல்கிறார் என்பதைக் கேட்போம்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி அவர்கள் குற்றம் சாட்டுவதில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் பொதுவாக நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற எல்லா ஊழியர்களுமே திருடுகிறார்கள் என்பது போல பேசுவது சரியல்ல. எனவே குறிப்பாக புகார் ஏதாவது இருந்தால் சொல்லலாமே தவிர, பொதுவாகக் குற்றம் சாட்டுவது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். திரு. தாமரைக்கனி சொன்ன குற்றச்சாட்டு பெருமளவில் உண்மையாக இருக்கிறது என்று அமைச்சரே சொன்னார். அதனாலே இது ஒரு பெரிய பிரச்சினையே இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர். நான் பெருமளவில் என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட குறைபாடு வந்தால் அதைக் களைவதற்கு முயற்சிக்கிறோம் என்றுதான் சொன்னேன். நான் என்னுடைய துறை ஊழியர்களை அப்படிச் சொல்லவில்லை.

[1996 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இரண்டு பாயிண்டிற்குத் தான் நீங்கள் பொறுப்பு ஏற்க முடியும். ஆதலால் நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம் அந்தப் பதிலைப் பொறுத்து திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன் : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பொருள்கள் குறைவாக வழங்கப்படுகிறது என்பது உண்மைதான். அதற்குக் காரணம் கடந்த காலங்களில் ஆளும்கட்சியினர் அந்த நியாய விலைக் கடைகளுக்குச் சென்று 5 கிலோ அரிசி கொடு, சீனி கொடு என்று கேட்டு இலவசமாக வாங்கிக் கொண்டு சென்றிருந்தார்கள். இது ஊரறிந்த உண்மை. (குறுக்கீடு)

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ? நீங்கள் உட்காருங்கள் முதலில்.

திரு. ஜி. நிஜாமுதீன் : இதுபோன்ற நிகழ்வுகளில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றம்சாட்டி கேட்கக் கூடாது என்ற ஒரு மரபு இருந்தாலும்கூட, கூட்டுறவுத் துறையிலேயும் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அது உங்களுக்குத் தெரியும். நியாய விலைக் கடையைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 22,000 கடைகள் இருக்கிற காரணத்தால் அதிலே ஏற்பட்டிருக்கிற பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து எல்லாவற்றுக்கும் பூரணமாக முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. அசோகன்

திரு. அ. அசோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் .. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொன்ன வார்த்தையை நான் நீக்கவில்லை. அவர் சொன்ன வார்த்தையையும் நான் நீக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். அவர் கருத்துதானே சொல்கிறார். நீங்கள் சொன்ன

1996 ஆகஸ்ட் 7]

கருத்தைக் கூட நான் நீக்கவில்லையல்லவா ? நீங்கள் எல்லாமே சீதனமாக வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னீர்கள்.

முற்பகல் 10-30

பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. அசோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் எடைக் குறைவாக வழங்கப்படுகிறது. காரணம் கேட்டால், பொருட்கள் எங்களுக்கு முன்வைத்து எடைபோட்டு ஒப்படைக்கப்படுவதில்லை. அதனால், பொதுவாக எடை குறைவாக இருக்கும் என்கிறார்கள். இந்தக் குறை தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவாக இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து கொண்டுவருகிறபோது எடை குறைவாக இருக்கிறது என்பது ஒன்று, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், அந்தத் துறையில் மிக அதிகமாகக் கவனம் செலுத்தியதால், எடை குறைவாகப் போடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் இப்போது குறைந்திருக்கின்றன. 20,000 நியாய விலைக் கடைகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கிற குறைபாடுகள் கூட, இப்போது ஏற்படாத அளவிற்கு மக்களுக்கு குடிமைப் பொருட்கள் சென்று சேரவேண்டும் என்பதிலே துறையும், அரசும் கவனமாக இருக்கின்றன. குற்றச்சாட்டுகளுக்கு இடம்கொடுக்காமல் இனிமேல் இந்தத் துறை கவனித்துக்கொள்ளும் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

120—

நெசவாளர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

** 838—* **திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—